சுற்றுநிருப இல: 94/06

எனது இல: 4/மிசெ4/49 (III)
கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு
''இசுருபாய''
பத்தரமுல்ல.

மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதம கணக்காளர்கள், கோட்டக்கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்/கணக்காளர்கள், கல்வி கல்லூரிகளின் தலைவர்கள், பதிவாளர்கள், நிதி உதவியாளர்கள், அமைச்சின் கொடுப்பனவுப் பிரிவுக்குப் பொறுப்பான கணக்காளர்கள் ஆகியோர் அனைவருக்கும்

அரசாங்க உத்தியோகத்தர் முற்பண 'பி' கணக்கின் கீழ் கடன்களை/முற்பணங்களை அறவிடுதலும் தொடர் நடவடிக்கையை முற்றுவிப்பதும்

01. நோக்கம்

அரசாங்க உத்தியோகத்தர் முற்பண 'பி' கணக்கின் கீழ் கல்வி, கலாசார அலுவலகள் அமைச்சினாலும் அதன் நோக்கெல்லைக்குட்பட்ட பல்வேறு கணக்கீட்டுக் கூறுகளாலும் பல்வேறு கடன்களும் முற்பணங்களும் வழங்கப்பட்டுள்ளனவாயினும் தாபனக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளும், திறைசேரி, பொது நிருவாக அமைச்சு, கல்வி அமைச்சு ஆகியவற்றினால் காலத்துக்கு காலம் வழங்கப்படும் சுற்று நிருப அறிவுரைகளும் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக கைக்கொள்ளப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

(1) கடன் தவணைப் பணங்களை அறவிடுதல்,
(2) இடமாற்றஞ் செய்யப்பட்ட அலுவலர்கள் செலுத்தவேண்டிய மீதிகளைப்பற்றி அறிவிப்பதும் அவற்றைத் தீர்த்து வைப்பதும்.
(3) ஏற்கனவே வழங்கப்பட்ட கடன்கள்/முற்பணங்கள் சம்பந்தமான தொடர் நடவடிக்கை.

இந்த ஏற்பாடுகளைக் கைக்கொள்வதன் முக்கியத்துவத்தை திணைக்களங்களினதும், தாபனங்களினதும் தலைவர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவருவதே இச்சுற்று நிருபத்தின் முக்கிய நோக்கமாகும். அரசாங்க உத்தியோகத்தர் முற்பண 'பி' கணக்கின் கீழ் கடன்களை/முற்பணங்களை வழங்குவதிலும், இக்கடன்களை/முற்பணங்களை வழங்கிய பின்னர் தொடர் நடவடிக்கையை முற்றுவிப்பதிலும், இக்கடன்களை/முற்பணங்களைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றஞ் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களிலும் பின்வரும் விதிமுறைகள் கண்டிப்பாக கைக்கொள்ளப்படல் வேண்டும்.

02. இடமாற்றஞ் செய்யப்பட்ட அலுவலர்கள் செலுத்த வேண்டியுள்ள மீதிகளைப் பற்றி அறிவிப்பதும் அவற்றைத் தீர்த்து வைத்தலும்

திறைசேரிப் பிரதிச் செயலாளரால் வழங்கப்பட்ட 89 ஆம் இலக்க (22.10.1993 ஆம் தேதி பீஈ/2/000/7தொ.111) பொதுத் தொழில் முயற்சிகள் சுற்றுநிருபத்தைக் குறிப்பாகக் கவனிக்க. சுலபமாகப் பார்த்தற் பொருட்டு அச்சுற்று நிருபத்தின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றஞ் செய்யப்பட்டு இன்னொரு

அமைச்சுக்கு/ திணைக்களத்துக்கு/ பணியிடத்திற்கு விடுவிக்கப்படும் போது, அவருக்கு வழங்கப்பட்ட கடனில்/ முற்பணத்தில் செலுத்தப்படாத மீதித்தொகை ஏதும் இருப்பின் அது அவருடைய புதிய பணியிடத்திற்கு உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும். இடமாற்றத் தேதியிலிருந்து ஒரு மாதம் கழிவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு வழங்கப்பட்ட கடன்களில்/ முற்பணங்களில் செலுத்தப்படாது எஞ்சியிருக்கும் தொகை அவருடைய முந்திய திணைக்களத்திற்குக் காசோலை மூலம் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். செலுத்தப்படாத தவணைக்கட்டணங்களை உரிய சம்பளப் பேரேடுகளில் அல்லது இடாப்புகளில் சீ.சீ. 10 படிவத்திற் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இப்பதிவேடுகளை உரிய முறையிற் பேணுவது கொடுப்பனவுகளுக்குப் பொறுப்பாகவுள்ள கணக்காளருடைய/ பதிவாளருடைய/ நிதி உதவியாளருடைய தனிப்பட்ட பொறுப்பாகும். இதில் ஏதும் கவனக் குறைவு ஏற்பட்டுவிட்டால் அதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். தாபனக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 16ம் பிரிவைத் தயவு செய்து பார்க்க.

03. கடன்/ முற்பணம். அது வழங்கப்பட்ட குறிப்பான நோக்கத்துக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளமைக்குரிய சான்று சம்பந்தமான ஏற்பாடுகள்.

ஒரு முற்பணத்தை/ கடனை பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவர், அதனைப் பெற்று இரு வாரங்களுக்குள், அது என்ன நோக்கத்துக்கு வழங்கப்பட்டதோ அந்நோக்கத்துக்கே அது பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை நிருபிப்பதற்குரிய பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். குறிப்பாகக் காணி அல்லது வீடுஞ் சொத்தும், அல்லது வாகனம் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட கடன்கள் / முற்பணங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கத்துக்கே பயன்படுத்தப் பட்டன என்பதற்குச் சான்றான பத்திரங்கள் சமர்பிக்கப்படல் வேண்டும். கடனில் / முற்பணத்தில் பயன்படுத்தப்படாத தொகை அரசாங்கத்துக்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். குறிக்கப்பட்ட கடன் / முற்பணம், அது எந்த நோக்கத்துக்கு வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்துக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதற்குச் சான்றான பத்திரங்கள் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் சமர்பிக்கப்படவில்லையெனில் 40%, $33^1/_3$% ஆகிய அறவீட்டு எல்லைகளைக் கவனியாது தவணைக்கட்டணத்தை இரு மடங்காக்கி அறவிடுதல் வேண்டும். சாதாரண வட்டி வீதமான 7.2 உடன், தண்ட வட்டியாக 5% சேர்க்கப்பட்டு 12.2% வட்டிஅறவிடப்பட வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். தாபனக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 3.1.1, 3.1.2, 3.1.3, 3.2 ஆகிய பகுதிகளை பார்க்க.

04. வேலைவாய்ப்பின் பொருட்டு அல்லது படிப்பை மேற்கொள்ளும் பொருட்டு வெளிநாடு செல்லும் உத்தியோகத்தருக்குச் சம்பளமற்ற லீவு அனுமதித்தல்

வேலைவாய்ப்பின் பொருட்டு வெளிநாடு செல்வதற்கு அல்லது உண்ணாட்டிலேனும் வெளிநாட்டிலேனும் படிப்பை மேற்கொள்வதற்குச் சம்பளமற்ற லீவுக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தாம் அரசாங்கத்திடமிருந்து பெற்ற கடன்கள்/ முற்பணங்கள் எல்லாவற்றையும் தீர்த்து விட வேண்டும். சம்பளமற்ற லீவு உத்தியோகத்தர் ஒருவருக்குச் சாதாரணமாக வழங்கப்படும் போது, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் செலுத்த வேண்டியுள்ள தவணைப்பணங்களைச் செலுத்துவதற்கு திருப்திகரமான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுஎன்பதை லீவை அனுமதிக்கும் உத்தியோகத்தர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். உதாரணமாக, சம்பளமற்ற லீவு 3 மாதகாலத்திற்கு அனுமதிக்கப்படுகின்றதாயின், கடன் தவணைப் பணங்களையும் அக்காலப் பகுதிக்குரிய வட்டியையும் லீவை அனுமதிப்பதற்கு முன்னர் அறவிட்டுக்கொள்வது விரும்பத்தக்கது. தாபனக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 3.18, 3.18.1 ஆகிய பிரிவுகளைப் பார்க்க.

05. உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெறும்போது அல்லது இறக்க நேர்ந்தபோது

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெற்றால் அல்லது இறக்க நேர்ந்தால், அவர் பெற்ற முற்பணத்தில்/ கடனில் செலுத்தப்படாது எஞ்சியுள்ள தொகை ஓய்வூதிய விண்ணப்பத்தின் மூலம் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர்

பெற்றுக் கொண்ட கடனில்/ முற்பணத்திற் செலுத்தப்படாது எஞ்சியுள்ள தொகை அவருடைய திரட்டிய ஓய்வூதியத்திலிருந்து/ மரணக்கொடையிலிருந்து முற்றாகக் கழிக்கப்பட வேண்டும். சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு, ஓய்வூதியத்திலிருந்து அல்லது விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்திலிருந்து கழிக்கப்பட வேண்டும். தாபனக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.2.4, 4.2.5, 4.4 ஆகிய பிரிவுகளை பார்க்க.

**06 பிரதான கடன்பட்டோன் பதவியை துறந்துள்ள சந்தர்ப்பத்தில் பிணைக்காரரிடமிருந்து தவணைப்பணங்களை அறவிடுதல்.**

அரசாங்கத்திடமிருந்து ஒரு முற்பணத்தை/ கடனைப் பெற்றுள்ள அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர், பதவியைத் துறந்துவிட்டால், அவர் பெற்ற கடனில்/ முற்பணத்தில் செலுத்தப்படாது எஞ்சியிருக்கும் தொகை அவருடைய பிணைக்காரரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். அதாவது, செலுத்தப்படாது எஞ்சியிருக்கும் தவணைப்பணங்கள் வட்டியுடன் பிணைக்காரரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். தாபனக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5, 4.6 ஆம் பிரிவுகளைப் பார்க்க.

**07. ஒரு கூட்டுத்தாபனத்திற்கு அல்லது சபைக்கு நிரந்தரமாக விடுவிக்கப்படும் ஒரு உத்தியோகத்தருடைய விடயத்தில்**

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்கத்திடமிருந்து அவர் பெற்றுக்கொண்ட கடன்களை/ முற்பணங்களை முற்றாகத் திருப்பி செலுத்தும் வரை நிரந்தரமாக அவரை அரசாங்க சேவையிலிருந்து ஒரு கூட்டுத்தாபனத்துக்கேனும் சபைக்கேனும் விடுவித்தலாகாது. தாபனக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.8 ஆம் பிரிவை பார்க்க.

**08. கடன்களை/ முற்பணங்களை அனுமதிப்பதற்கு தத்துவமளிக்கப்பட்ட அலுவலர்கள், அனுமதியை வழங்குவதற்கு முன்னர் பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்தித் தம்மை திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டும்.**

1. கடன்/ முற்பணம் எத்தேவைக்கென விண்ணப்பிக்கப்பட்டதோ அத்தேவைக்கே குறிப்பாக அதனை விண்ணப்பக்காரர் பயன் படுத்துவார் என்பது
2. கடனின்/ முற்பணத்தின் முழுத்தொகையையும் விண்ணப்பக்காரரிடமிருந்து அல்லது பிணைக்காரரிடமிருந்து அறவிட்டுக் கொள்ளலாம் என்பது.

இப்படியான கடனை/ முற்பணத்தை அனுமதிக்கும் உத்தியோகத்தருடைய அலட்சியத்தினால் அல்லது தாமதத்தினால் அரசாங்கத்துக்கு ஏதும் நட்டம் ஏற்பட்டிருந்தால் அந்நட்டம், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். அத்துடன், கடமையைச் சரியான முறையிற் செய்யாது அலட்சியஞ் செய்தமை குறித்து ஒழுக்காற்று நடவடிக்கையையும் அவருக்கு எதிராக எடுக்கப்பட வேண்டும். தாபனக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவின் கீழுள்ள உப பிரிவுகள் அனைத்தையும் பார்க்க.

**9. கணவன் மனைவி ஆகிய இருவருள் ஒருவர் மாத்திரம் கடன்பெறுவதற்குத் தகுதியுடையவராவார்.**

கணவன்மனைவி ஆகிய இருவரும் அரசாங்க உத்தயோகத்தர்களாக இருக்கும் சந்தர்ப்பங்களில் காணி அல்லது வீடும் சொத்தும் அல்லது வாகனம் கொள்வனவு செய்வதற்கான கடனை / முற்பணத்தை பெற்றுக்கொள்ளும் தகுதி இவர்களுள் ஒருவருக்கு மாத்திரமே, அதுவும் அவருடைய சேவைக்காலம் முழுவதிலும் ஒரு தடவையே உண்டு.

கணவன் மனைவி ஆகிய இருவரும் தமது விவாகம்பற்றித் தெரிவிக்காது கடன்கள்/ முற்பணங்கள் பெற்றிருப்பின், இவர்களுள் ஒருவர் அவர் பெற்றுள்ள கடனை/ முற்பணத்தை உடடியாகத் திருப்பி செலுத்தும் படி உத்தரவிட வேண்டும். அத்துடன் பொய்யான உறுதிமொழி கூறிக்கடன்களை/ முற்பணங்களை பெற்றுக் கொண்டமைக்காக இருவருக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை தொடரப்பட வேண்டும். அவர்கள் விவாகஞ்செய்வதற்கு முன்னர் இக்கடன்களை/ முற்பணங்களைப் பெற்றிருந்தால் மேல் கூறப்பட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதில்லை. தாபனக் கோவையின் xxiv ஆம் இலக்க அத்தியாயத்தின் 11.5 ஆம் பிரிவை பார்க்க.

10. கடன்கள்/ முற்பணங்கள் சம்பந்தமான பத்திரங்கள் சேதமுறாத வண்ணம் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

முற்பணங்களை/ கடன்களை பெற்றுள்ள ஓர் உத்தயோகத்திடமிருந்து அக்கடன்கள்/ முற்பணங்கள் முற்றாக அறவிடப்படும் வரை, அக்கடன்கள்/ முற்பணங்கள் சம்பந்தமான பத்திரங்கள் யாவும் சேதமுறாதபடி பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். இப்பத்திரங்கள் தொலைந்து விட்டால் அல்லது கைதவறி விட்டால், இவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் பொறுப்பு வழங்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். ஒரு முற்பணத்தை/ கடனை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் ஒருவர் வேறு ஒரு திணைக்களத்திற்கு இடமாற்றஞ்செய்யப்பட்டவிடத்து அவர் பெற்றுக் கொண்ட முற்பணம்/ கடன் சம்பந்தமான பத்திரங்களை அவர் இடமாற்றத்திற்குச் சென்ற திணைக்களத்திற்கு அனுப்பிவிடாது, அவர் பெற்றுக்கொண்ட முற்பணம்/ கடன் முற்றாக அறவிடப்படும் வரை, கோவைப்படுத்திப் பாதுகாப்பாக கொடுப்பனவைச் செய்த திணைக்களத்தில் வைத்துக் கொள்ளப்பட வேண்டும். தாபனக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 11.14, 11.15 ஆகிய பிரிவுகளையும் இவற்றின் கீழ்க் காணப்படும் எல்லா உப பிரிவுகள்ளயும் பார்க்க.

11. கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணலும் கணக்கிணக்கஞ் செய்தலும்

கணக்கீட்டுக் கூறுகள் அனைத்தும் அவற்றினால் வழங்கப்படும் கடன்கள்/ முற்பணங்கள் சம்பந்தமான கட்டுப்பாட்டுக் கணக்கு ஒன்றினைப் பேணுதல் வேண்டும். தத்தமது கணக்குகளின் செம்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு காலாண்டும் கோட்டக் கல்வி அலுவலகங்கள் எல்லாம் அவற்றின் கட்டுப்பாட்டுக் கணக்கை மாகாணக்கல்வித் திணைக்களத்துடன் கணக்கிணக்கஞ் செய்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கணக்கீட்டுக் கூறும் அதன் கணக்குக்கு ஆதாரமாக நி.பி 506 (டி) இன் பிரகாரம், ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 31ஆந் திகதி உள்ளபடியான தனித்தனி நிலுவைகளைப் பட்டியற்படுத்தி அடுத்துவரும் ஆண்டு மார்ச்சு 31ஆந் திகதிக்கு முன்னர் வழங்குதல் வேண்டும். இது சம்பந்தப்பட்ட கணக்கீட்டுக் கூறு குறித்து அமைச்சு பேணும் கட்டுப்பாட்டுக் கணக்கில் திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளபடியான பற்றுமீதியுடன் ஒத்திசைதல் வேண்டும். இவ்விதிகள் கைக்கொள்ளப்படாதவிடத்துச் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு கூறுக்குச் சம்பந்தப்பட்ட ஆண்டு ஏப்பிரல் 01 ந் திகதி முதல் அரசாங்க உத்தியோகத்தர் முற்பண "பி" கணக்கு தற்காலிகமாக நிறுத்தப்படும்.

13. முடிவுரை

தாபனக் கோவைகளின் xxiv அத்தியாயத்திலிருந்து எடுத்து மேலே விளக்கப்பட்ட ஏற்பாடுகளையும் பிரிவுகளையும் உங்கள் திணைக்களத்து/ அலுவலகத்து உத்தியோகத்தர்கள் அனைவரும் கண்டிப்பாகக் கைக்கொள்ளுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுக. அத்துடன் இச் சுற்று நிருபத்தில் ஏற்பாடுகளும்.

இணைக்கப்பட்டுள்ள திறைசேரி சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளும், கண்டிப்பாக கைக்கொள்ளப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்க. இச்சுற்றுநிருபம் கிடைத்துள்ளமை பற்றி அறிவிக்க.

என். வி. கே. கே. வேரகொட
செயலாளர்
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

பிரதிகள்:

1. கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2. எல்லா மாகாணப் பிரதம செயலாளர்களுக்கும்
3. எல்லா மாகாணக் கல்வி அமைச்சுகளினதும் செயலாளர்களுக்கும், மேலதிகச் செயலாளர்களுக்கும் - த.பொ
4. கணக்காளர் (அகக் கணக்காய்வு)- எல்லாக் கணக்கீட்டுக் கூறுகளும் இந்த அறிவுரைகளைப் பின்பற்றுகின்றனவா என ஆராய்ந்து அறிவிப்பதற்கு
5. வலயங்களுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள் - த.பொ.
6. எல்லாப் பாடசாலை அதிபர்களுக்கும் தகவற்பொருட்டு. பணிக்குழு உறுப்பினர்கள் அனைவரினதும் கவனத்துக்கு இச்சுற்றுநிருபத்தின் விடயங்களைக் கொண்டு வருக.